அரசு கலைக் கல்லூரி
(தன்னாட்சி) – கோவை-18.
BA தமிழ் முதலாமாண்டு
இலக்கணம் நன்னூல் .அலகு –
4 மெய்யீற்றுப் புணரியல் Code
No : 18 BTA13 C 3:36 pm

# நன்னூல் – மெய்யீற்றுப் புணரியல் குறிப்புகள்

நன்னூலில் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என்று இரண்டு அதிகாரங்கள் இருக்கின்றன. அதில் எழுத்ததிகாரத்தில் உயிரீற்றுப் புணரியலைத் தொடர்ந்து இருப்பது மெய்யீற்றுப் புணரியல்.

**புணர்ச்சி இரண்டு வகைப்படும்.**

- **இயல்புப் புணர்ச்சி**
- **விகாரப் புணர்ச்சி – தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம்**
  பூ + கொடி = பூங்கொடி (தோன்றல்)
  கல்+ தீது = கஃறீது (திரிதல்)
  மரம் + வேர் = மரவேர்(கெடுதல்)
  ஒன்பது + பத்து = தொண்ணூறு (விகாரம்)

வேற்றுமைப் புணர்ச்சி
வேற்றுமை உருபு மறைந்தோ வெளிப்பட்டோ புணர்வது.
கல்லூரி + கட்டினான் = கல்லூரி கட்டினான்
கல்லூரியை + கட்டினான் = கல்லூரியைக் கட்டினான்

அல்வழிப் புணர்ச்சி
உருபு இல்லாத புணர்ச்சி

1. **எழுவாய்த் தொடர்**
2. **விளித்தொடர்**
3. **வினைத்தொகை**
4. **பண்புத்தொகை**

9. **வினையெச்சத் தொடர்**
10. **தெரிநிலை வினைமுற்றுத் தொடர்**
11. **குறிப்பு வினைமுற்றுத் தொடர்**
12. **இடைச்சொல் தொடர்**
13. **உரிச்சொல் தொடர்**
14. **அடுக்குத் தொடர்**

இந்தப் பதினான்கும் புணர்கின்ற புணர்ச்சி தான் அல்வழிப் புணர்ச்சி.

## மெய்யீற்றுப் புணரியல்

நிலைமொழி ஈற்றிலே மெய்யெழுத்து நின்று வருமொழியுடன் புணர்வது மெய்யீற்றுப் புணரியல்.

**ஆவி பன்னிரண்டு ஞணநமன யரலவழள** (சாயும் உகரம்) குற்றியலுகரம் => 12 + 5 + 6 + 1 => 24 எழுத்துகள் மொழிக்கு இறுதியில் வரும்.

இந்த 24இல் ஆவி – உயிரெழுத்துகள்.
ஞணநமன + யரலவழள –> 11 மெய்யெழுத்துகளும் மொழிக்கு இறுதியில் நின்று புணர்வது தான் மெய்யீட்டுப் புணர்ச்சி.

204. **உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே**
தமிழ் + அழகு = தமிழழகு
நூல் + ஆசிரியர் = நூலாசிரியர்

205. **தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.**
கண் + இமை => கண்ண் + இமை = கண்ணிமை

மெய்யீற்றின் முன் மெய்:
**தன் ஒழி மெய்முன் யவ்வரின் இகரம்**
**துன்னும் என்று துணிநரும் உளரே**
(துணிநரும் உளரே – இழிவு சிறப்பும்மை)
வேல் + யாது => வேல் + இ + யாது = வேலியாது
ல் + இ = உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே

வேல் + யாது = வேல்யாது என்றும் புணரும்.

**ஏவல்வினை நனிய ய அல் மெய் வரின்**
**உவ்வுறும் ஏவல் உறாசில சில்வழி**

வேற்றுமையில்:
உரிஞ்+ கடிது
(உரிஞ் – முதல்நிலைத் தொழிற்பெயர்)
உரிஞ்+ கடிது => உரிஞ் +உ + கடிது
உரிஞு+ கடிது => உரிஞுக்கடிது
(க் – உயிரீற்றுப் புணரியல் – இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும்)

ஏவல் வினை – உண்
உண்+சாத்து => உண் + உ + சாத்தா = உண்ணுசாத்தா
(தனிக்குறில் முன்னொட்டு உயிர் வரின் இரட்டும்)
கசதப ஏன் மிகவில்லை?
சாத்தா – என்பது விளிப்பெயர்

**நகர ஈற்றுத் தொழிற்பெயருக்குச் சிறப்பு விதி**
நவ் இறு தொழிற்பெயர்க்கு அவ்வுமாம் வேற்றுமை
ஏற்கெனவே நகர ஈற்று உகரச் சாரியை பெறும் எனப் பார்த்தோம். அகரச் சாரியையையும் வரும்.
பொருந் + கடுமை
பொருந் + அ + கடுமை => பொருந + கடுமை => பொருநக் கடுமை

**ணகர னகர ஈறு – சிறப்பு விதி**
ணன வல்லினம் வர டறவும் பிறவரின்
இயல்பும் ஆகும் வேற்றுமைக்கு அல்வழி
அனைத்து மெய்வரினும் இயல்பாகும்

சிறுகண் + களிறு = சிறுகட்களிறு
பொன் + தூண் = பொற்றூண்

மண் + ஞாற்சி = மண்ஞாற்சி
பொன்+ஞாற்சி = பொன்ஞாற்சி

**ணகர னகர ஈறு கெடுதல்:**

குறில் அணைவில்லா – தனிக்குறில் இல்லாத

தூண் – தூ – குறில் இல்லை.
தூண் + நன்று => தூண் + ணன்று => தூ+ணன்று = தூணன்று
பசுமண் – தொடர்மொழி
பசுமண்+நன்று = பசுமண் + ணன்று => பசும+ணன்று = பசுமணன்று

**ணகர ஈற்றுப் பெயர்க்குச் சிறப்பு விதி:**
சாதி குழூஉ பரண் கவண் பெயர் இறுதி
இயல்பாம் வேற்றுமைக்கு உணவு எண்சாண் பிற
டவ்வாகலுமாம் அல்வழியும்மே

பாண்+குடி = பாண்குடி (பாணர் சாதி)
அமண் + குடி = அமண்குடி (குழு)
பரண்+கால் = பரண்கால்
கவண்+கால் = கவண்கால்
எண்(எள்) +பெரிது = எட்பெரிது
சாண்+கோல் = சாட்கோல்

**னகர ஈற்று சாதிப் பெயர்:**
னஃகான் கிளைப்பெயர் இயல்பு உம் அஃகான்
அடைவு உம் ஆகும் வேற்றுமை பொருள் கு

எயின்+சேரி = எயின்சேரி
எயின்+சேரி => எயின் + அ + சேரி =எயினச்சேரி

எயின் – சாதி, னகர ஈற்றுச் சாதிப் பெயர்.
இயல்பாக எயின்சேரி என்றும் வரும். அஃகான் பெற்றும் (அ பெற்றும்) எயின+சேரி என்றும் வரும்.
எயின+சேரி = எயினச்சேரி (கசதப மிகும்.)

**மீன் என்பதற்குச் சிறப்பு விதி:**
மீன் றவொடு பொரூஉம் வேற்றுமை வழியே

**தேன் என்பதற்குச் சிறப்பு விதி:**

தேன்மொழி மெய்வரின் இயல்பும் மென்மை
மேவின் இறுதி அழிவும் வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலுமாம் இருவழி

தேன்+கடிது = தேன்கடிது (அல்வழிப் புணர்ச்சி எனவே தான் தேக்கடிது தேங்கடிது என வரவில்லை)
தேன்+மாட்சி = தேன்மாட்சி
தேன்+மொழி = தேமொழி
(மென்மை மேவின் இறுதி அழிவும்)

தேன்+குடம் = தேக்குடம், தேங்குடம்
(வலிவரின் ஈறுபோய் வலிமெலி மிகலுமாம் இருவழி) (வேற்றுமைப் புணர்ச்சி)

**எகின் என்பதற்குச் சிறப்பு விதி:**
மரம் அல் எகின் மொழி இயல்பு உம் அகரம்
மருவ வலி மெலி மிகல் உம் ஆகும்

**இயல்புப் புணர்ச்சி:**
எகின்+கால் = எகின்கால்
எகின்+சிறை = எகின்சிறை

எகின்+புள் => எகின் + அ + புள் = எகினப்புள் => எகினம்புள்

**குயின் என்பதற்குச் சிறப்பு விதி:**
குயின் ஊன் வேற்றுமைக் கண்ணும் இயல்பே
குயின் + கடுமை = குயின்கடுமை
ஊன+கடுமை = ஊன்கடுமை

மின், பின், பன்,கன் என்பதவற்றிற்குச் சிறப்பு விதி:
மின் பின் பன் கன் தொழிற்பெயர் அனைய
கன் அ ஏற்று மென்மை ஓடு உறழும்

கன் + தட்டு => கன் + அ + தட்டு => கன்ன + தட்டு => கன்னத்தட்டு (தனிக்குறில் ஒற்று உயிர் வரின் இரட்டும்)

**தன் என் நின் என்பனவற்றிற்குச் சிறப்புவிதி:**
தன் என் என்பவற்று ஈற்று ன வன்மை ஒடு
உறழும் நின் ஈறு இயல்பு ஆம் உற
உறழும் – இயல்பாகவும் வரும், னகரம் றகரமாகவும் வரும்.

தன்+பாதுகாப்பு = தன்பாதுகாப்பு, தற்பாதுகாப்பு

என்+பகை => என்பகை, எற்பகை
நின்+பகை => நின்பகை

மகர ஈறு [பொதுவிதி]
மவ் ஈறு ஒற்று அழிந்து உயிர் ஈறு ஒப்ப உம்
வன்மைக்கு இனம் ஆ திரிப உம் ஆகும்
வட்டம்+கல் = வட்டக்கல்
மரம் + சிறிது = மரஞ்சிறிது

**மகரத்திற்குச் சிறப்பு விதி:**
வேற்றுமை மப்போய் வலிமெலி உறழ்வும்
அல்வழி உயிர் இடைவரின் இயல்பும் உள

குளம் + கரை = குளக்கரை, குளங்கரை
(வேற்றுமை மப்போய் வலிமெலி உறழ்வும்)
மரம் + அழுதது = மரமழுதது
மரம் + வலிது = மரம் வலிது

**நும், தம், எம், நம் என்பனவற்றிற்குச் சிறப்பு விதி:**
நும் தம் எம் நம் ஈறு ஆம் மவ்வரு ஞ ந
நும் + ஞாண் = நுஞ்ஞாண்
தம் +ஞாண் = தஞ்ஞாண்
நம் + ஞாண் = நஞ்ஞாண்
நும்+நூல் = நுந்நூல்

**அகம் என்பதற்குச்**

**சிறப்பு விதி:**

அகம் முனர் செவி கை வரின் இடையன கெடும்

அகம்+செவி –> இடைகெட்டு, அம்+செவி

அம்+செவி = அஞ்செவி

அகம்+கை –> இடை கெட்டு, அம்+கை என மாறி, அங்கை என மாறும்.

மகர மெய்யீற்றுப் புணர்ச்சி விதி, ய், ர், ல், வ் புணர்ச்சி, ள, ழ புணர்ச்சி விதிகள் பார்க்க வேண்டியிருக்கின்றன.

வினாக்கள்: 2மதிப்பெண்
1. தனிக் குறில் முன் உயர் வரின் இரட்டுமா ?
2.மகரவீறு புணர்தலை சான்றுடன் விளக்குக?
வினாக்கள் : 5 மதிப்பெண்
1 .யகர , ரக ர . ழகர ஈறுகள் குறித்து எழுதுக ? 2 லகர, ளகர, வகர ஈறு குறித்து எழுதுக ?3. நெல் , செல் , கொல் , கொல் புணரும் விதம் எழுதுக.
வினா: 10 மதிப்பெண்
T .மெய்யீற்றுப் புணரியலை விளக்குக.
3:48 pm